முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்
அசல் வழக்கு எண். 23/2021

இன்று 2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23 ம் நாள் இன்று இந்த பி.வா.சா.1 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பிரதீப் குமார் ஜெயின் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | கிராமம் | : |
| வயது | : | தாலூக்கா | : |
| நாள் | : 23-02-2026 | மாவட்டம் | : திருப்பூர் |

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் இந்த வழக்கு சொத்தை யாரிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளேன் என்ற ஆவணவத்தை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். தாவா சொத்தை நான் உண்மையான வாரிசுதாரர்களிடம் கிரையம் பெற்றுள்ளேனா என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்தில் வா.சா.ஆ.13 ல் ஈஸ்வரன் பெயர் உள்ளதா என்றால் தெரியாது. இந்த வழக்கு சொத்து வேலப்ப கவுண்டர் முருகப்ப கவுண்டர் இருவரும் வாங்கிய சொத்து என்றால் சரிதான். மொத்த சொத்து 13 ஏக்கர் 22 செண்ட் என்றால் தெரியாது. எனக்கு தமிழ் படிக்க தெரியாது.

2. ஏ மற்றும் பி செட்டியுல் சொத்தாக வேலப்ப கவுண்டர் மற்றும் முருகப்ப கவுண்டர் சொத்துக்களை பாகப் பிரித்துள்ளார்கள் என்றால் சரிதான். பாக பிரித்துள்ள சொத்து முருகப்ப கவுண்டர் சொத்து என்றால் சரிதான். பிரிக்கப்பட்டுள்ள சொத்தில் Ex.A2 ல் 6 ஏக்கர் 89 செண்ட் முருகப்ப கவுண்டர் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். முருகப்ப கவுண்டர் க.ச.581 ல் 83 செண்ட் மற்றும் 7 செண்ட் அவருடைய தம்பி பழனிசாமி மற்றும் ராமசாமிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது.

3. ஆறுமுக கவுண்டர் மகன் ராமசாமி பழனிசாமிக்கு 90 செண்ட், பெரிச்சி கவுண்டருக்கு 1 ஏக்கர் 77 செண்ட் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. இரண்டு சகோதரருக்கு எழுதி வைத்தது போக மீதம் 6 ஏக்கர் 35 செண்ட் உள்ளது என்றால் தெரியாது. இந்த சொத்தை முருகப்ப கவுண்டர் 19.09.1996 ல் உயில் ஆவணம் (Ex.A14) எழுதி வைத்துள்ளார் என்றால் தெரியாது. ஈஸ்வர மூர்த்தி வாங்கிய பத்திரமும் கிரையம் செய்த பத்திரமும் எழுதி கொடுத்த பத்திரமும் வழக்கு நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல.

4. நான் கிரையம் செய்த சமயத்தில் தாவா சொத்துக்கள் செண்ட் 10 முதல் 12 லட்சம் வரை போகும் என்றால் தெரியாது. அந்த சமயத்தில் நான் கிரையத்திற்கு தொகை செலுத்திய ரசீது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்து சமந்தமாக முருகப்ப கவுண்டர் காவல் நிலையத்தில் 12.11.2000 லோன் வாங்கி தருவதாக புகார் கொடுத்துள்ளது தெரியமா என்றால் தெரியாது. இந்த விபரங்கள் அனைத்தும் தெரிந்தும் வழக்குக்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் எனது செல்வாக்கை பயன்படுத்தி தடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. நான் ஈஸ்ரமூர்த்தி கிரையம் பெறுவதற்கு முன்பு இந்த சொத்தின் உரிமையாளர் முருகப்ப கவுண்டரிடம் அணுகிறார் என்றால் சரியல்ல. அதற்கு அவர் அவரது பேரன் சிவராம லிங்கத்தை அணுகும்மாறு கூறிவிட்டார். அவர் வெளி ஊரில் இருந்ததால் அவரை அணுக முடியாமல் அவரது பெண் வாரிசு DW1 ஈஸ்வர மூர்த்தியை அணுகி சட்டத்துக்கு புறம்பாக உயிலை ரத்து செய்து அந்த உயிலில் உண்மையாக சிவரா லிங்கம் என்று போடாமல் வெறு பெயர் போட்டு உயிலை ரத்து பன்னியது செல்லாது. நீங்கள் DW1 ரத்து செய்த உயில் சாசனத்தில் உள்ள பெயரும் வாதியின் பெயரும் முருகப்ப கவுண்டர் எழுதி வைத்த உயில் சாசன பெயரும் வெவ்வேறு. அதனால் நீங்கள் சட்டத்துக்கு புறம்பாக ரத்து செய்து பெற்ற வழக்கு சொத்து கிரையம் செய்து சரியல்ல.

6. DW1 மற்றும் DW2 கிரையம் செய்த பத்திரத்தில் உள்ள செக்கு பந்தியும் நாங்கள் முவரும் சேர்ந்து கிரையம் செய்த செக்குபந்தியும் வெவ்வேறு. அதனால் தான் நீங்கள் அசல் பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அசல் பத்திரத்தில் கையெழுத்து வெவ்வேறாக உள்ளது என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA
Digitally signed by VANITHA
Date: 2026.02.23 16:24:28 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.